[1984 மார்ச் 9

தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குச் செய்யப்பட்டுள்ள மருத்துவப் பரிசோதனை வசதி.

243 (*வினா 20824) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் அரசு அலுவலர்களுக்குப் புதிய மருத்துவப் பரிசோதனைக்கு வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கென செயலகத்தில் ஒரு மருந்தகம் செயல்படுவதுடன் சென்னை அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் பேராசிரியர்கள் வாரம் ஒருமுறை இம்மருந்தகத்திற்குச் சென்று சில தனி வியாதிகளுக்குப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கிறார்கள்.

காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

231 (வினா 16982) திரு. சி. கோபால் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வது பற்றிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி மின்வாரியம் ஆராய்ந்து வருகிறது.

(முற்பகல் 9—10)

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதை ஆராய்ந்து வருவதைப் போல் கடல் அலைகளில் இருந்தும் சூரிய ஒளியிலிருந்தும் மின்சார உற்பத்தி செய்வதற்கு ஏதாவது செயல் திட்டம் இருக்கிறதா ? தமிழகத்திலே அப்படி அவைகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

1984 மார்ச் 9]

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, காற்றின் அலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்கிறபோது மின் உற்பத்தி செய்து பம்பு செட்டுகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது நேரடியாக பம்புசெட்டுகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.

232 (*வினா 17628) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் குறித்து தமிழக மின்வாரியம் விரிவான திட்ட மதிப்பீடு தயாரித்து வருகிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் ஒரு சிறு நீர் மின் திட்டம் ஏற்படுத்துவதற்கு அரசு விரிவான திட்டங்களைத் தயார் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரிவான திட்ட அறிக்கை 24-12-1983 தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவருடைய ஒப்புதலும் ஒரு வாரத்திலே கிடைத்துவிடும் எனத் தெரியவருகிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் ஏற்படும்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு என்ன? எத்தனை யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்படும்? எத்தனை பகுதிகள் அதனால் பயன்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் உற்பத்தித் திறன் 20 மெகா வாட். 4.2 கோடி யூனிட்டுகள் இதன் மூலம் பெறப்படும். பொதுவாக அந்தப் பகுதியிலே அது பயன்படுத்தப்படும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்